# நாடாளுமன்ற வளாகத்தில் 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்!






ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா போன்ற இந்தியா கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டதையடுத்து ஒன்றிய அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டன. காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.,க்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சோனியாகாந்தி, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்டோர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற இரு அவைகளின் தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மக்களவை தி.மு.க. குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன், மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, துணைத்தலைவர் மு.சண்முகம், கொறடா வில்சன், இரு அவைகளின் தி.மு.க. குழு பொருளாளர் ஜெகத்ரட்சகன் உட்பட தி.மு.க. எம்.பி.க்கள் உள்பட இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!...

முதல் பக்கத் தொடர்ச்சி

6. ஒன்றிய அரசு அறிவித்த முக்கியத் திட்டங்களைப் பார்க்கையில், நமது மாநில அரசின் வரவுசெலவுத் திட்டத்தின் நகல்போலத் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக - ஆயிரம் தொழிற்பயிற்சி மையங்கள் மேம்பாட்டுத் திட்டம், பணிபுரியும் மகளிருக்கான (தோழி) விடுதிகள், தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்கள் தங்கும் விடுதிகள், நீரேற்று புனல் மின் உற்பத்திக் கொள்கைகள் போன்றவை தமிழ்நாடு அரசின் வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் ஏற்கெனவே இடம்பெற்றவை. குறிப்பாக, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒன்றிய அரசு, நாடு முழுவதும் 20 இலட்சம் இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி வழங்குவதாக இன்று அறிவித்துள்ளது.

ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் ஒரு ஆண்டிற்கு 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கி வருகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒன்றிய அரசின் நிதிநிலை நடுத்தர மக்களுக்கு ஏமாற்றம்!**

7. ஒன்றிய நிதியமைச்சர் தன்னுடைய நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டில் ஏற்கெனவே சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் பல திட்டங்களை நகல் எடுத்துப் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால், இரவல் வாங்கிப் பயன்படுத்தியவர், நன்றிக்கடனாக தமிழ்நாட்டிற்குப் பெரும் திட்டம் ஒன்றுகூட அறிவிக்காமல் விட்டது ஏன்?

8. ஒன்றிய அரசு, மாநிலப் பட்டியலில் உள்ள முத்திரைத்தாளின் கட்டணத்தைக் குறைக்குமாறு அறிவித்துள்ளது. எனினும் இந்த வருவாய் இழப்பை ஈடுசெய்வதற்கு எந்தவொரு அறிவிப்பும் இல்லை.எனவே, ஒன்றிய அரசானது, முத்திரைத்தாள் கட்டணக் குறைப்பினை ஈடுசெய்வதற்கு இழப்பீடு வழங்க வேண்டும். ஏற்கெனவே, சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பால் தமிழ்நாட்டிற்கு ஆண்டிற்கு ஏற்பட்டுள்ள 20,000 கோடி ரூபாய் இழப்பிற்கு ஒன்றிய அரசு இழப்பீடு வழங்காமல் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

9. ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையானது, நடுத்தர மக்களுக்கு எந்தவொரு நன்மையும் செய்யாமல், வெறும் பெயரளவிற்கு வருமானவரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. பத்தாண்டுகளாக வரிக்குறைப்பின்றி இருந்துவந்த நிலையில் வெறும் 17,500 ரூபாய் மட்டுமே குறைக்கப்பட்டுள்ளது, இக்குறைப்பு கூட புதிய வரிமுறையில் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. பழைய முறையில் எவ்வித குறைப்பும் அளிக்கப்படாதது மத்தியதர குடும்பங்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

மொத்தத்தில் தமிழ்நாட்டின் நலன் முழுமையாக வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட வேண்டும் என்பது போல் அமைந்துள்ள நிதிநிலை அறிக்கை இது. தமிழக மக்கள் இவ்வாறு வஞ்சிக்கப்படுவது இந்திய நாட்டின் கூட்டாண்மைத் தத்துவத்திற்கு எதிரானது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அரசு கோரியுள்ள பல்வேறு திட்டப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை மாநிலத்திற்கு வழங்கிட வேண்டுமென்று மீண்டும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு

## வங்கி உரிமம் வழங்கிட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.வலியுறுத்தல்!



நாமக்கல், ஜுலை 25-

டெல்லியில் மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு உரிமம் வழங்கிட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒன்றிய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு வங்கி உரிமம் தேவைப்படுகிறது. கடந்த 1996 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் இருந்து நாமக்கல் மாவட்டம் பிரிக்கப்பட்டு, நாமக்கல் மாவட்டத்தில், தற்போது பால் மற்றும் கோழி வளர்ப்பில் வலுவான இருப்புடன் பொருளாதார மையமாக உருவெடுத்துள்ளது. பெரும்பான்மையான மக்கள் விவசாயப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பான்மையானோர் விவசாயக் கடன், பால்பண்ணை மற்றும் கைத்தறி நெசவாளர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு கூட்டுறவு சங்கங்கத்தினர் பெருமளவில் விவசாயப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சங்கம் மற்றும் பொதுமக்கள் வழங்கிய நிலையான வைப்புத் தொகை சுமார் ரூ.1000 கோடி டெபாசிட்கள் கொண்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் புதிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைப்பதற்கு சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு ஒரு குழுவை அமைத்து அக்குழு நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை நிறுவ பரிந்துரை செய்துள்ளது.

இப்பரிந்துரையின் படி,வங்கி முறையாக நிறுவப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டம் 1983 ன் கீழ் பதிவு செய்யப்பட்டு கடந்த மார்ச் 13, 2024 அன்று வங்கி செயல்படத் தொடங்கியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கான வங்கி உரிமத்திற்கான விண்ணப்பம் நபார்டு மூலம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு உரிமம் வழங்க இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கிகளுக்கு நிதியமைச்சகம் ஆலோசனை வழங்க வேண்டும்.

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வலியுறுத்தியுள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரசு முறை பயணமாக ஆஸ்திரேலியா நாட்டிற்கு சென்றுள்ள வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று (24.07.2024) மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அட்ரியன் லிட்டில் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின்போது தமிழக அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைசெயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கீதாலட்சுமி மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் கலந்துரையாடலின் போது மெல்போர்ன் பல்கலைக்கழகத்திலிருந்து தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சிக்கு, வேளாண்மையில் இயந்திர மயமாக்குதல் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையில் உள்ள தொழில்நுட்பங்களை கண்டறிவது குறித்தும் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப புதிய பயிர்கள் மற்றும் பயிர் ரகங்களை அறிமுகம் செய்தல் மற்றும் இப்ப பல்கலைக்கழகமும், தமிழக வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து இணையவழிக் கல்வி, மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறுவதும் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

### கடந்த 10 ஆண்டுகாலம் கவலைப்படாமல் இருந்துவிட்டு - தற்போது

## காலி மதுபாட்டில்களைத் திரும்பப் பெறுவது பற்றி எடப்பாடி பழனிசாமி அறிக்கை விடுவது நியாயமா?

### அமைச்சர் சு.முத்துசாமி கண்டன அறிக்கை!

சென்னை, ஜுலை 25-

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களின் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி டாஸ்மாக் கடைகளில் காலி பாட்டில்களை திரும்பப் பெறுவது சம்பந்தமாக (23.07.2024 அன்று) ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி டாஸ்மாக் நிறுவனத்தால் காலி புட்டிகளை திரும்பப் பெறும் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் கடந்த 15.05.2022 முதல் அமல்படுத்தப்பட்டது. மற்ற மலை சார்ந்த பகுதிகளில் 15.06.2022 முதல் அமல்படுத்தப்பட்டது. தொடர்ந்து இதர மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்து இது வரை மொத்தமாக 9 மாவட்டங்களில் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தினை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விரிவுபடுத்தும் பொருட்டு மண்டலங்கள் வாரியாக ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டிருந்தது. இந்நிலையில் இது தொடர்பான வழக்கில் காலி புட்டிகள் மூன்றாம் நபரிடம் செல்லாமல் இருப்பதற்காகவும், காலி புட்டிகள் உடைக்கப்படாமல் மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கே சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்துடனும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் காலி புட்டிகளை மதுபான உற்பத்தி நிறுவனங்களே திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டி அறிவுறுத்தியது. அதனடிப்படையில் ஏற்கனவே கோரப்பட்டிருந்த ஒப்பந்தப்புள்ளிகள் ரத்து செய்யப்பட்டது. மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தும் நடவடிக்கையாக மதுபான உற்பத்தி நிறுவனங்களை அழைத்து காலி புட்டிகளை அவர்களே சேகரம் செய்ய வேண்டுமென்ற பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

**அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாகச் செயல்படுத்தப்படும்!**

மதுபான உற்பத்தியாளர்களும் காலி புட்டிகளை திரும்பப் பெறுவது குறித்து இசைவு தெரிவிக்க சிறிது கால அவகாசம் கேட்டுள்ளனர்.



சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு காலி புட்டிகளை திரும்பப் பெறும் திட்டம் மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் அறிமுகப் படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.இத்திட்டத்தினை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலுடன் வருகிற அக்டோபர் மாதத்திற்குள் அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாக செயல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வயல்களிலும், சாலைகளிலும், பூங்காக்களிலும் காலி மதுபாட்டில்கள் வீசப்படு வதை தடுப்பதற்காகத் தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

10 ஆண்டுகால அவர்களின் ஆட்சியில் ஏன் திரு. பழனிச்சாமி இதை சிந்திக்கவில்லை. இப்பொழுது குற்றச்சாட்டு கள் சொல்லக்கூடியவர்கள் அந்த 10 ஆண்டு காலத்தில் இதை நடைமுறைபடுத்தியிருக்கலாமே. காலி பாட்டில்கள் வயல்களிலும் பொது இடங்களிலும் வீசப்பட்டதால் அந்த நேரத்தில் விவசாயிகளும் பொதுமக்களும் எவ்வளவு கடுமையாக பாதிக்கப்பட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. 10 ஆண்டு காலமாக அவர்களது ஆட்சிக் காலத்தில் அரசுக்கு வர வேண்டிய வருவாய் என்ன ஆனது என்று கேட்க வேண்டியுள்ளது.

காலி பாட்டில்களை திரும்பப் பெறுவதற்கான புதிய முயற்சிக்கான நடவடிக்கையை எடுக்கிறபொழுது மாண்பமை உயர்நீதிமன்றம் சில நல்ல அறிவுறுத்தல்களை தெரிவித்த தன் அடிப்படையில் அதை அமலாக்கவே ஏற்கனவே விடப்பட்ட டெண்டரை டாஸ்மாக் நிர்வாகம் ரத்து செய்துள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், கடைகளில் கூடுதல் விலைக்கு விற்பதாக குற்றச்சாட்டு கூறியுள்ளார். கடந்த கால உங்கள் ஆட்சியில் இருந்து தொடர்ச்சியாக இருந்துவந்த அந்த பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளது. ஒரு பணியாளர் அந்த தவறை செய்வதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்த போது டேமேஜ் ஆகிற பாட்டில்களுக்கு போதிய நஷ்ட ஈடு கிடைப்பதில்லை; கூடுதல் கடை வாடகை மற்றும் பராமரிப்புக்கான செலவு செய்ய வேண்டியுள்ளது; மின்சார கட்டணம் கூடுதலாக கட்ட வேண்டியுள்ளது; இந்த செலவுகளை பணியாளர்களே ஏற்றுக் கொள்ளும் நிலை இருந்தது. தற்போது அவைகளை ஆய்வு செய்து மின்சாரத்திற்கு தனி மீட்டர் பொருத்தி, உரிய கட்டணத்தை செலுத்திட டாஸ்மாக் நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாடகை முறையாக நிர்ணயிக்கப்பட்டு, துறை அந்த வாடகையை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. டேமேஜ் ஆகும் பாட்டில்களை சரியாக கணக்கிட்டு அச்செலவையும் நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**பில்லிங் இயந்திரங்கள் பொருத்த நடவடிக்கை!**

மாநிலத்தில் உள்ள அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் வங்கிகள் மூலமாக மின்னனு கருவிகள் (Point of Sale Machines) நிறுவப்பட்டு மின்னனு பரிவர்த்தனைகள் மூலமாக பணம் செலுத்தும் வசதி நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் Billing Machine வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விற்பனைக்கு ஏற்றார்போல் ஒரு மதுபான கடைக்கு இரண்டு முதல் நான்கு வரை பொருத்தும் பொருட்டு 12000 பில்லிங் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு மாத காலத்திற்குள் அனைத்து டாஸ்மாக் மதுபான கடைகளிலும் பில்லிங் இயந்திரங்கள் பொறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பணியாளர்களின் பிரச்சினைகளை தீர்த்து பாதுகாக்க வேண்டியது அரசினுடைய கடமை என்கிற வகையிலே கலந்தாய்வின் மூலம் பணிமாற்றம் செய்து கொடுத்தது; மருத்துவ செலவுக்கான ஏற்பாடு செய்தது; பணியாளர்களை நேரடியாக அழைத்து அவர்களுக்கு இருக்கிற பிரச்சனைகளை தீர்க்க முயற்சித்தது போன்ற காரணங்களால் பணியாளர்கள் நம்பிக்கையோடு பணியாற்றுகிறார்கள் என்பது கவனிக்கத்தக்க ஒன்றாகும். மேலும் பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் கடந்த ஆண்டு 20% வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்கள் முன் வைக்கும் மற்ற கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் அனைத்து சங்கங்களையும் ஒருங்கிணைத்து பேச்சுவார்த்தை நடத்தி அக்கோரிக்கைளுக்கு தீர்வு காணப்படும்.

சில இடங்களில் கூடுதலாக விற்கிறார்கள் என்ற செய்தி கிடைத்தவுடன் விசாரித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது பணியிடை நீக்கம் மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாஸ்மாக்கடைகளிலோ பார்களிலோ தவறு நடந்தால் தொடர்ச்சியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் வெளியிலே விற்பனை செய்யக்கூடியவர்கள் மீது காவல்துறை வழக்கு பதிவு செய்து கைது உட்பட கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937ல் திருத்தம் செய்யப்பட்டு அதில் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அபராதத் தொகையை அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை உயர்த்தியும், தண்டனைகளை கடுமையாக்கி அதிகபட்சமாக ஆயுள் தண்டனை வரை விதிக்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

தற்போது மதுக்கூடங்களுக்கு ஆன்லைன் மூலமாக டெண்டர் விடப்பட்டு வெளிப்படைத் தன்மையுடன் முடிவெடுக்கப்படுகிறது. உங்கள் ஆட்சிக் காலத்தில் ஆன்லைன் டெண்டர் முறை இருந்ததா?

காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறுவதை பற்றி 10 ஆண்டு காலம் கவலைப் படாமல் இருந்துவிட்டு தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி இப்படிப்பட்ட ஒரு அறிக்கை விடுவது எந்த வகையில் ஏற்புடையது.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம், உதகை, தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தலைமையில், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் அரசுத்துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நேற்று முன்தினம் (23.07.2024) நடைபெற்றது. உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட வன அலுவலர்கள் கௌதம், (உதகை), வெங்கடேஷ், (கூடலூர்), முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் அருண் உட்பட பலர் உள்ளனர்.